www.tamilarangam.net



# சிறிலங்கா - தமிழீழ முரண்பாட்டின் புவிசார் அரசியல் அடிப்படை- பகுதி 9

தாமரை காருண்யன்




ஈழம் தோல்வி கண்டதா? தோற்கடிக்கப்பட்டதா?
பகுதி 9

இந்திய – தமிழீழ புவிசார் அரசியல் குறித்து கடந்த அங்கத்தில் நோக்கியிருந்தோம்.

புவிசார் அரசியல் குறித்த நமது பார்வை கெடுபிடிக்கால புவிசார் அரசியல் என்ற காலப்பகுதிக்குள்தான் நின்று கொண்டிருக்கிறது.

இன்றைய அங்கத்தில் சிறிலங்காவின் புவிசார் அரசியலை தமிழீழத்துடன் பொருத்திப் பார்ப்போம்.

பொதுவாக சிறிலங்கா – தமிழீழ உறவு முரண்களை சிறிலங்கா – தமிழீழ தேசங்களின் புவிசார் அரசியல் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதனைவிட உள்நாட்டு அரசியல் முரண்பாடாக – அல்லது தேசிய இனமுரண்பாடாக பார்ப்பதும் வெளிப்படுத்துவதும்தான் அதிகமாக உள்ளது.

இவ் அணுகுமுறையிலிருந்து விடுபட்டு சிறிலங்கா தமிழீழ தேசங்கள் தென்னாசியாவிலும் இந்து மாசமுத்திரப் பகுதியிலும் தமது புவியியல் அமைவிடங்களை கொண்டிருப்பவை என்ற அடிப்படையில் - இப் புவியியல் அமைவிட அம்சங்கள் இவ்விரு தேசங்களின் முரண்பாட்டுக்கு வித்திட்ட பரிமாணங்களை இவ்வங்கத்தில் நோக்குவோம்.

நாம் முன்னைய அங்கம் ஒன்றில் குறிப்பட்டவாறு தமிழர் தேசம் தனது சுதந்திரத்தையும் இறைமையையும் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இழந்திருந்தது.

பின்னர் சுதந்திரம் என்ற பெயரில் இலங்கைத்தீவின் அரசுரிமையையும் ஆட்சியதிகாரத்தையும் பிரித்தானியர்கள் சிங்கள தேசத்திடம் கையளித்ததுடன் தமிழர் தேசத்தின் சுதந்திரமும் இறைமையும் சிங்கள தேசத்திடம் பறிபோயின.

இவ்வாறு தமிழர் தேசம் தனது சுதந்திரத்தையும் இறைமையினையும் முதலில் காலனித்துவவாதிகளிடமும் பின்னர் சிங்கள தேசத்திடமும் இழந்தது காலனித்துவ-ஏகாதிபத்தியப் புவிசார் அரசியல் காலத்தில் நடைபெற்று முடிந்தவை.

கெடுபிடிக்கால புவிசார் அரசியலின் அடிப்படையில் சிறிலங்கா – தமிழீழ தேசங்களின் புவிசார் அரசியல் முரண்களை நோக்குவதற்கு முன்னர் இவ்விரு தேசங்களுக்குமிடையிலான முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் இத் தேசங்களின் புவிசார் அரசியலுக்கு இருந்த பங்கினை நோக்குவது பயன் தரும்.

இதற்கு 1948 இல் இலங்கைத்தீவின் ஆட்சியுரிமையினைச் சிங்கள தேசம் தம்வசப்படுத்திக் கொண்டமைக்குப் பின்னராக நிலைமைகளை முதலில் நோக்கி இதன் பின்னர் பின்னோக்கி இணைவோம்.

காலனித்துவ காலத்தில் அரசுரிமையினை இழந்திருந்த சிங்கள தமிழர் தேசங்களில் சிங்கள தேசம் தனது அரசுரிமையினை மீட்டெடுத்தமை கெடுபிடிக்கால புவிசார் அரசியல் காலம் ஆரம்பமாகிய காலத்தில் சிங்கள தேசத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பாகும்.

இதன் மூலம் சிங்கள தேசம் 1972 வரை இலங்கையாகவும் (Ceylon) பின்னர் சிறிலங்காவாகவும் அரசுகள் என்ற குழுமத்தினுள் நுழைந்து கொண்டது.

அரசுகள் எனும் மாமன்னர்கள் எனும் தலைப்பில் எழுதப்பட்ட அங்கத்தில் அரசுகளின் உலகம் குறித்துப் பேசியிருந்தோம். அரசுகள் இணைந்து உருவாக்கும் உலக ஒழுங்கு பற்றியும் குறிப்பிட்டிருந்தோம்.

உலக அரசுகளில் ஒன்றாக சிங்கள தேசம் அரசுரிமையினைக் கொண்டிருந்தமை அனைத்துலக அரங்கில் அரசுகள் என்ற முறைமையினூடாக கிடைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புக்களையும் சிங்கள தேசத்திற்கு வழங்கியது.

இது உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் சிங்கள தேசம் வலிமை பெற உதவியது.

முன்னொரு அங்கத்தில் 80 மில்லியன் தமிழரை விட 18 மில்லியன் சிங்களவர்கள் ஏன் உலகுக்கு முக்கியமாய்ப் போனார்கள் என்ற கேள்வியை எழுப்பியிருந்தோம் அல்லவா!

இதற்குரிய பதில் சிங்கள தேசத்திடம் அரசு இருந்தது என்பதுதான்.

அதுவும் தென்னாசியாவிலும் இந்து மாசமுத்திரப் பகுதியிலும் புவியியல் அமைவிடம் சார்ந்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அரசொன்று சிங்கள தேசத்தின் கைகளில் இருந்தது.

தமிழர்கள் எண்ணிக்கையில் மிக அதிகமாக உலகப் பரப்பெங்கும் வாழ்ந்தாலும் அவர்கள் அரசற்ற தேசிய இனமாகவே (Nation without state) இருந்தனர். சர்வதேச விடயங்களில் அரசியல் அதிகாரம் அற்றவர்களாகவே இருந்தனர்.

இதனால் உலகப் பந்தில் நடைமுறையில் தமிழர் தேசத்தை விட சிங்கள தேசம் சக்தி மிக்கதாக இருந்தது. இதனை நம்மில் பலர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

## புதினங்கள்

மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும்
பல வகுப்பறைகள் மரங்களுக்குக் கீழே நடக்கின்றன
ஊரான ஊரிழந்தோம்! ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்!!
வன்குரலுக்கு எதிரான கலகக் குரல்
தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
நக்கீரனுக்கு ஏன் இந்தக் கோடாலிக் காம்பு வேலை?
முள்ளிவாய்க்கால் படுகொலையின் தத்துவப் பின்னணி
கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்!
தேசியத் தலைவருக்கு விளக்கு வைக்கத் துடிக்கும் மார்க் அன்ரனிகள்

## செய்திகள்

முகாம்களுக்கு செல்லவிடாது தடுப்பது விடயங்களை ஒளித்து மறைக்க விரும்புபவர்களின் செயல்! கூட்டமைப்பு அறிக்கை
உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம்' - பான் கீ மூனுக்கு சிறிலங்கா கோரிக்கை!
விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தலாம்! - அதனால் தடை என்கிறது இந்தியா!
'எங்களது வாகனங்கள் எங்கே?' - கிளிநொச்சியில் தமது வாகனங்களைத் தேடும் மக்கள் கேள்வி!
இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டிவிடும் என எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளனர்: செல்வம் அடைக்கலநாதன்
சிறிலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான விவகாரங்கள்: பசில் ராஜபக்சவே கையாள்வார்!
நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளை பொதுமக்கள் பார்வையிட முடியாது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ்வப்போது சில தமிழ்த் தனிமனிதர்கள் அரசுகளில் உயர் பொறுப்புக்களில் இருந்தாலும் இவர்களின் சேவை தமிழரின் அரசுக்கானது அல்ல. பல தடவைகளில் தமிழர்களுக்கு எதிராகவே இவர்களின் சேவையினை அரசுகள் பயன்படுத்தியும் உள்ளன. சிறிலங்கா அரசுக்கு லக்ஸ்மன் கதிர்காமர் வழங்கிய சேவை இதற்கு நல்ல உதாரணம்.

தேசங்கள் (Nations) அரசுரிமைக்குரித்துடையவை எனக் கருதப்படுவவை.

ஆனால் உலகில் எல்லா தேசங்களும் அரசினை அமைத்து விடவில்லை. உதாரணமாக குர்திய தேசம் (Kurdish nation) தனக்கென்ற அரசினை இன்னும் அமைத்து விடல்லை. தமிழர் தேசத்தின் நிலையும் இதுதான்.

தனியொரு தேசம் அரசாக அமையும் போது அவை தேச-அரசு (Nation-state) என அழைக்கப்படலாயிற்று.

இத் தேச அரசுகளில் ஒரு தேசிய இனம் பெரும்பான்மையாக ஆளும் இனமாக இருக்க ஏனையர்கள் சிறுபான்மையினராக – தம்மைத் தனித் தேசங்கள் என வரயைறை செய்ய முடியாத நிலையில் இருப்பர். ஐரோப்பாவில் உள்ள பல நாடுகள் இத் 'தேச-அரசுகளுக்கு' உதாரணமாக உள்ளன.

ஏனைய அரசுகள் பொதுவாக நிலவெல்லை அரசு (territorial state) என அழைக்கப்பட்டு வந்தவை. இவ் நிலவெல்லை அரசுகளில் பல தேசிய இனங்களும் ஒரு அரசுக்குள் வெவ்வேறு வகை அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளின் அடிப்படையில் வாழும் வகை ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும்.

இன்று நடைமுறையில் தேச - அரசு என்பது தனித் தேசம் அமைத்துள்ள அரசினை மட்டும் குறிப்பதாக இல்லை.

பல தேசிய இனங்கள் கொண்ட நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள நிலவெல்லை அரசுகளையும் தேச – அரசுகளாகக் குறிப்பிடப்படும் நடைமுறையொன்றும் தற்போது தோன்றியுள்ளது.

இதனால் இத்தகைய நாடுகளில் தேச நிர்மாணம் (Nation building) அரச நிர்மாணம் (State building) என்ற இரு நடைமுறைகள் முக்கியமானவையாகப் பேசப்படுகின்றன.

தேச நிர்மாணம் என்பது வெவ்வேறு தேசிய இனங்களையும் இனக்குழுக்களையும் இணைத்த வகையில் ஒரு தேச அடையாளத்தை உருவாக்கும் முயற்சி. பல்வேறு தேசிய இனங்களையும் இனக்குழுக்களையும் கொண்ட இந்தியாவினை ஒரு இந்திய தேசமாக (Indian nation) உருவாக்கும் முயற்சி இதற்கு ஒரு உதாரணம்.

நான் முதலில் இந்தியன் - பின்னரே தமிழன் என ஒருவர் தம்மை அடையாளப்படுத்துவாரானால் இத் தேச நிர்மாண முயற்சி அவரைப் பொறுத்தவரை வெற்றியடைந்திருக்கிறது.

'நான் இந்தியனே அல்ல. தமிழன்' என இன்னுமொருவர் கூறுவராயின் அவரைப் பொறுத்த வகையில் இத் தேச நிர்மாண முயற்சி படுதோல்வியடைந்திருக்கிறது.

அரச நிர்மாணம் என்பது சட்டவாக்கம், நிர்வாகப் பொறிமுறை, நீதிமுறைமை இணைந்த வகையிலான – அதே வேளை இவற்றிடையே தனித் தனியே செயற்பாட்டு வரைமுறைகள் கொண்ட முறையிலான கட்டமைப்புக்களை கட்டி எழுப்புவதும் அவற்றை சிறப்பான இயங்கு நிலையில் வைத்திருப்பதுமான நடைமுறையினைச் சுட்டி நிற்பது.

இதில் ஜனநாயக அரசு என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டவாக்க நடைமுறைக்குப் பொறுப்பாகவும் இவர்களில் பெரும்பான்மையான கட்சியோ அல்லது கட்சிகளோ அரச நிர்வாகப் பொறிமுறையான அரசாங்கத்தினை (Government) தலைமை தாங்கி வழிநடத்திச் செல்லும் வழிமுறையையும் கொண்டதாக இருக்கும்.

இத் தேச நிர்மாணமும் அரச நிர்மாணமும் சமகாலத்தில் ஒன்றுக்கொன்று ஒத்திசைவாக – தேசங்கள் ஒன்றையொன்று மேலாதிக்கம் செய்யாத வகையில் அமையும் பட்சத்தில் அங்கு தேசிய இன முரண்பாடுகள் தோன்றுவதற்கு வாய்ப்புக்கள் குறைவு.

ஆனால் இக் கருத்து கோட்பாட்டளவில் சாத்தியமாகுமளவுக்கு நடைமுறை உலகில் சாத்தியப்படுவதாக இல்லை. இதனால்தான் நாம் உலகெங்கும் தேசிய இன முரண்பாடுகளைச் சந்திக்கிறோம்.

இப் பின்னணிகளுடன் இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்தவுடன் அரசதிகாரத்தைத் தம் வசப்படுத்திய சிங்கள தேசம் எத்தகைய தேச மற்றும் அரச நிர்மாண முயற்சிகளில் இறங்கியது என்பதனை நோக்குவோம்.

சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களையும் பறங்கியர் மலாயர் போன்ற சிறுபான்மையினரையும் கொண்ட இலங்கை எனும் புதிய நாட்டை - இலங்கையர் என்ற பொது அடையாளத்தைக் கட்டி எழுப்புவதற்கான தேச நிர்மாணத்தை அரசதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட சிங்கள தேசம் மேற்கொள்ளவில்லை.

1949 இல் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையினைப் பறித்தமை, தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொண்டமை முதற் கொண்டு இற்றைவரையிலான சிங்கள ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் இலங்கையர் எனும் தேசத்தினை உருவாக்குவதற்குரியவனாக அமைந்திருக்கவில்லை.

மாறாக இலங்கைத்தீவினை சிங்கள தேசத்தின் முழுமையான உடமையாக்கிக் கொள்வதனையே சிங்கள ஆட்சியாளர்கள் முதன்மை நோக்காகக் கொண்டிருந்தனர்.

இதனால் இலங்கைத்தீவில் இலங்கையர் என்ற தேசத்தை நிர்மாணிக்க அவர்களால் முடியவில்லை. பிந்திய அர்த்தத்திலான ஒரு 'தேச-அரசாக' இலங்கை அரசு பரிமாணம் கொள்ளவும் முடியவில்லை.

இலங்கைத்தீவின் இந்நிலை தேச நிர்மாண முயற்சியில் இறங்கிய பிந்திய அரசுகளுக்கு ஒரு பாடமாகவும் அமைந்திருக்கிறது.

குறிப்பாக சிங்கப்பூரை அரசாகவும் தேசமாகவும் நிர்மாணம் செய்த லீ குவான் யூ அவர்கள் நாம் முன்னைய அங்கம் ஒன்றில் குறிப்பிட்டிருந்த அதே செவ்வியில் இது தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார்.

'..ஒரு தேசமாகக் கருதப்படக்கூடிய அடிப்படைகள் எமக்கிருக்கவில்லை. ஆனால் நாம் பிந்திச் சுதந்திரம் அடைந்திருந்தமை எமக்கு சாதகமான அம்சமாக இருந்தது. 1965 இல் கடந்த 20 வருடங்களில் தோல்வி கண்ட அரசுகளின் உதாரணங்கள் எம் முன்பிருந்தன. இதனால் இன, மொழி, மத முரண்பாடுகளைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதனை அறிந்திருந்தோம். நாம் இலங்கையைக் கண்டோம். அதன் பின்பு நாம் மேற்குறிப்பிட்ட (இனம் மொழி, மதம்) அடிப்படையில் எமது பண்டைய பெருமையைத் தோண்டி எடுக்க முற்பட்டால் நாம் அழிவுக்குள்ளாவோம் என்பதனைப் புரிந்து கொண்டோம்...' (http://www.nytimes.com/2007/08/29/world/asia/29iht-lee-excerpts.html?pagewanted=1&_r=1 இணைப்பை இறுதியாகப் பார்வையிட்ட திகதி 13.03.2010, மொழிபெயர்ப்பு கட்டுரையாளருடையது.)

சிங்கள தேசம் இவ்வாறு செயற்பட்டமைக்கும் இலங்கைத் தீவின் புவிசார் அமைவிடத்திற்கும் அம்சங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு.

இந்தியாவுக்குக் கீழே – தமிழகத்திற்கு நெருங்கிய வகையில் இலங்கைத்தீவு அமைந்திருந்தமைக்கும் சிங்கள தேசத்தின் அரசியற் சிந்தனை தோற்றம் பெற்று வளர்ந்தமைக்கும் இடையே ஒரு தொடர்பு உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் இருந்து – குறிப்பாகத் தென்னிந்தியாவிலிருந்து – தமிழ் மன்னர்களின் படையெடுப்புக்கும் ஆக்கிரமிப்புக்கும் சிங்கள தேசம் உள்ளாகியது என்ற வரலாற்று மனப்பதிவு சிங்கள தேசத்தின் கூட்டு நினைவில் ஆழப் பதிந்துள்ளது.

இதனால் சிங்கள தேசத்தின் ஆழ் மனதில் இந்திய விரோத – தமிழர் விரோதப் போக்கு குடிகொண்டிருக்கிறது.

நாம் இன்று 'மகாவம்ச மனநிலை' என்று இதனைக் குறிப்பிடுகிறோம். வரலாற்றாதாரங்கள் இல்லாத கற்பனைகளை மகாவம்சம் சிங்கள தேசத்தின் ஆழ் மனதில் பதிய வைத்து விட்டது என அறிவியல் ரீதியாக விமர்சனம் செய்கிறோம்.

ஆனால் நடைமுறையில் அறிவியலை விட குறியீடுகள் (Symbols) சக்தி மிக்கவையாக உள்ளன. இந்தியாவிலிருந்தும் தமிழர்களிடமிருந்தும் இலங்கைத்தீவு நோக்கி நடைபெற்ற படையெடுப்புக்களை சிங்கள தேசம் ஆக்கிரமிப்பின் குறியீடுகளாகப் பதிவு செய்து கொள்கிறது. இது 'மகாவம்ச மனநிலை' செழித்து வளர்வதற்கு ஏற்ற ஒரு விளைநிலமாக அமைந்து விடுகிறது.

ஈழத் தமிழர் தேசத்தினை இவ் இந்திய ஆக்கிரமிப்புக்கான முகவராகப் பார்வையிடும் சிந்தனையும் தோன்றி விடுகிறது.

இதே புவியியல் அமைவிடமும் அம்சங்களும்– தென்னாசியப் பிராந்தியத்தில் தாம் தமிழரை விட மிக எண்ணிக்கை குறைந்தவர்கள் என்ற தாழ்வுச் சிக்கலையும் சிங்கள தேசத்தின் மத்தியில் தோற்றுவித்து விடுகின்றன.

இதனூடாக ஈழத் தமிழர் பலமுள்ள தேசமாக இருத்தல் தனக்கு என்றுமே ஆபத்தானது என்ற அச்ச உணர்வும் இந்நிலையை இல்லாதொழிக்க வேண்டும் என்ற பெருமுனைப்பும் சிங்கள தேசத்தின் மத்தியில் தோற்றம் பெற்று விடுகின்றன.

இதனால் இலங்கைத்தீவினை – சிறிலங்காவாக்கி – திட்டமிட்ட வகையிலான இனக்கபளீகரக் கொள்கையினை நடைமுறைப்படுத்தி – அனைவரையுமே சிறிலங்கர்களாக்கி விடும் நடைமுறையினை சிங்கள தேசம் தான் அரசரிமையினைக் கைப்பற்றியதிலிருந்து தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இப் பின்னணியில் நோக்கின் இலங்கையின் தேசிய இனச்சிக்கல் புவிசார் அரசியலினதும் ஒரு குழந்தையே!

(அடுத்த சனிக்கிழமை (20.03) தொடரும்)

3/13/2010 1:40:33 PM

## உங்கள் கருத்துக்களை பதிவு செய்க:

பெயர்

ஊர்

நாடு

மின்னஞ்சல்

கருத்து (max. 2000 characters)

அ Press F8 for English Powered by Quillpad

படத்தில் உள்ள எழுத்துக்களை பதிவு செய்க:

Wx1323

Change Image

Send Comment

## மேலும்


- தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
- போராளிகள் குறித்து தலைவர் பிரபாவின் கவலை - தொடர் - 16
- புலிகளின் கடல்வழி விநியோக நுட்பங்கள்! கட்டுரைத் தொடர் - 15
- புலிகளின் மரபுப் போர்த் தகமை வளர்ந்தது எப்படி? கட்டுரைத்தொடர்- 14
- கிட்டுவை தமிழீழம் இழந்த கதை! கட்டுரைத் தொடர் - 13
- ராஜீவ் கொலைச் சம்பவம் ஏன் நிகழ்ந்தது? கட்டுரைத் தொடர் - 12
- சிறிலங்கா + தமிழீழம் = - இந்தியா: கட்டுரைத் தொடர் - பகுதி 11
- ஒஸ்லோ 'பிரகடனத்தை' புலிகள் ஏற்றார்களா? இல்லையா? பகுதி 10
- இந்திய - தமிழீழ புவிசார் அரசியல் முரண்! ஈழம்: கட்டுரைத் தொடர் - 8
- தமிழீழத்தின் புவிசார் அரசியல் நிலை! - ஈழம்: கட்டுரைத் தொடர்- பகுதி 7

»மேலும் சுவடுகள்

தேடுங்கள் தேடு

www.ponguthamil.com

செய்திகள் | பார்வை | ஆயிரம் பூக்கள் | பேசும் படம் | இனிது இனிது | முகங்கள் / நிறங்கள் | சுவடுகள் | அகப்பக்கம் | தேடல் | உங்கள் ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப...


© பொங்கு தமிழ் 2009 | விதிமுறைகளும் நிபந்தனைகளும் | info@ponguthamil.com |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்